Vol.24 | No. 7 | December 2020

The Official Organ of the Diocese of Thuckalay

இறையருள்

24TH DIOCESAN DAY CELEBRATION, SANGAMAM
08.11.2020

14.11.2020
JUBILEE CELEBRATION OF PRIESTS' & RELIGIOUS OF THE DIOCESE
CMC PROVINCIAL HOUSE, THUCKALAY

Happy Christmas & Happy New Year

29.11.2020
TCYM CENTRAL
ELECTION, KALLUVILAI

17.11.2020
TAMIL MEDIUM SCHOOLS CORRESPONDENT
WITH CHIEF MINISTER

NEW BAPTISM
MALAICODE

29.11.2020
NEW BAPTISM
VATTAKKOTTAI

THE OFFICIAL ORGAN OF THE DIOCESE OF THUCKALAY
VOLUME 24 No :07 DECEMBER 2020

இறையருள்
IRAIARUL

Editorial Board

Patron
His Excellency
Mar George Rajendran SDB
Chief Editor
Fr. Joseph Santhosh
Executive Editor
Mr. Soundara Raj
Associate Editors
Fr. Thomas Sathianesan
Mr. Edwinson
Mr. Berlin Athencod
Published by:
Fr. Joseph Santhosh
Bishop's House
Post Box No . 12
Thuckalay - 629 175
K.K.Dist,Tamil Nadu,India.
Designed by:
Jesin
Printed at
Pulari Offset Press
Thuckalay
Ph:04651-252570

உள்ளே...

Bishop's Message	02
ஆயர் சுற்றுமடல்	08
தமிழக ஆயர் பேரவை சுற்றுமடல்	12
மிஷன் லீக்	16
இளையோர் இயக்கம்	17
இல்வாழ்வு இயக்கம்	22
வின்சென்ட்-தே-பவுல் சங்கம்	25
சமூக சேவை சங்கம்	26
தமிழ்வழிக் கல்விக் கூடங்கள்	30
கூரியா செய்திகள்	32
Birthdays & Feastdays	33
மறைவட்டச் செய்திகள்	35
Bishop's Engagements	39

Bishop George Rajendran SDB
Diocese of Thuckalay

Mobile: +919443281100
Email: bpgeorgerajendran@gmail.com

BISHOP'S HOUSE
P.B. No. 12, Thuckalay P.O.
Kanyakumari District
Tamilnadu – 629175, India
Phone: +91-4651-250633
Diocese Email: thuckalaydiocese@yahoo.com

REF. NO. PRIESTS/GR/115/2020

30 November 2020

Dear Readers,

Greetings and prayerful wishes Bishop's House, Thuckalay!

Since the outbreak of the Covid-19 pandemic our people have endured testing times with courage, resilience, and compassion. Individuals and communities have made great sacrifices for the protection of health and life. Like many others, the Church has endeavoured to support the people in the face of considerable uncertainty and disruption. I owe a great debt of gratitude to you, dear Fathers, and to the many volunteers whose continued dedication has ensured that our churches have remained very safe places to gather for Mass and the Sacraments. We have also been blessed in the commitment of our school communities who have been supporting our young people in very demanding circumstances, including assisting with their Sunday catechism classes.

Advent and Christmas are likely to be very different this year. Advent, as a time of patient, hopeful waiting and longing, will have a particular resonance in these times, while the much-needed joy of Christmas may well be tempered by the impact of restrictions. I encourage parish communities to explore creatively ways in which the hope of Advent and the joy of Christmas can be realised and safely celebrated.

His Eminence Joseph Cardinal Ratzinger, now Pope Emeritus Benedict XVI, writes in his book Seek That Which is Above: "Advent is concerned with that very connection between memory and hope which is so necessary to man. Advent's intention is to

awaken the most profound and basic emotional memory within us, namely, the memory of the God who became a child. This is a healing memory; it brings hope. The purpose of the Church's year is continually to rehearse her great history of memories, to awaken the heart's memory so that it can discern the star of hope. It is the beautiful task of Advent to awaken in all of us memories of goodness and thus to open doors of hope."

With advent, we begin a new liturgical season and start living and celebrating the mysteries of redemption afresh in the new year. It is a special season, in which we join the fathers and prophets of the Old Testament in waiting for the coming of the promised Messiah. It is a period of fruitful waiting for the Lord. This waiting has a double dimension: it relives the memory of long wait for the first coming of Jesus as an Infant born of the Virgin Mary; it is a hopeful expectation of the glorious return of the Lord to judge the living and the dead.

Waiting is one of the most profound human experiences in life: a couple expecting a child, a student waiting for the results of an examination, someone expecting the arrival of a friend or family member after long separation. In fact, it is hope and expectation that keep humans alive. The moral and spiritual strength of a person is measured in terms of his/her hopes and expectations. In this time of Christmas, we are expecting the incarnation of the Son of God, the saviour of all. Our world is in need of a Saviour and as believers, we await God's coming. It is an invitation to live with a new spirit of hope and expectation for God's intervention in our lives and in human history. Wish you all a fruitful advent season.

Advent tells us that the Emmanuel - God with us – has left his divinity to enter into our humanity to raise us up to a higher place, a higher purpose, to transform our lives, to redirect our lives, to turn us around, plant our feet on higher and solid ground. When we understand the real value of Advent in our lives, we would be led into a much greater understanding and appreciation for Christmas; and when we have a greater understanding and appreciation of these two seasons, we will find ourselves in the place where we

can no longer think only of cards and cribs and cakes; but move beyond it to recognizing God in ourselves and especially in the working of God in history and the people.

In our Syro-Malabar tradition, advent is a season of fasting. We fast for twenty-five days to prepare for the nativity of Our Lord. When speaking of fasting, we need to keep in mind that, it is not an external action. It has to come from within, spread to all our actions and raise us to the heavens. Fasting is not a period of sadness; it is a period of enjoyment. It is a period of enjoying heavenly bliss. It is a period for celebrating the Holy Qurbana and the Liturgy of the Hours in the most solemn manner possible. It is a time for being with God in His temple. In fasting, more than not eating or drinking or taking part in any bodily entertainments, it is the spiritual entertainments that are more important, namely, the celebration of the liturgies.

If fasting in the Old Testament was a sign of repentance, in the New Testament it is for acquiring the divine qualities and is equal to the heavenly life. Fasting is for purifying the heart. It is for humbling ourselves in the presence of God in the heavenly kingdom. We know the parable of the Pharisee and the Tax Collector (Luke 18: 9-14). The Pharisee stood by himself and prayed: "God, I thank you that I am not like other people – robbers, evildoers, adulterers - or even like this tax collector. I fast twice a week and give a tenth of all I get." But the tax collector stood at a distance. He would not even look up to heaven, but beat his breast and said, "God, have mercy on me, a sinner." We know that the tax collector and not the Pharisee, who went home justified before God.

Let us meaningfully spend the twenty-five days that are at hand in order to prepare for receiving the child Jesus. Whenever we think of Christmas, we are reminded of the nativity scene with the stable, the ox, the donkey, the shepherds, Mary, Joseph and on Christmas the image of the Child Jesus. This is an opportunity to reflect on the mystery of God's love for us that we are celebrating.

Christmas is about a definitive moment in time, in human history, when God showed that He cared for every one of us by entering into our humanity so that He could walk with us, so that He could live with us, so that He could lead us, carry us, lift us to that better place. It is therefore not just about holidays, but rather about the love of our God who wanted to become one with us so deeply, that he gave up his divinity to enter into our wretched humanity. Our greetings, therefore, as they relate to these two seasons should stay clear of a happy holiday syndrome. Our greetings should clearly speak of, and include the real reason for the seasons of Advent and of Christmas - Jesus Christ.

As all of us are aware, Christmas - the birth of God in a poor manger - is the most celebrated feast in this world. Christmas offers us all an opportunity to recapture glimpses of childhood's sacred memories. There is timelessness about gazing into the crib and coming face to face with the truth that God came down from heaven and dwelt among us as a helpless baby. The gospel story tells us that at Bethlehem on a starry night the Son of God was born. A burst of light startled the shepherds, and angels sang at his birth. It is the simplicity of this happening that captures the imagination. Christmas is more than a story that is told; it is about a birth that brings heaven right down to earth. Love came down at Christmas, broke the sacred barrier between creature and Creator and gave an eternal value to our lives. God has given us the gift of reaching beyond ourselves and discovering the joy of heaven.

There was nothing romantic about the first Christmas. Christ's birth was a hard and bitter experience for Joseph and Mary, two poor people with doors slammed in their faces. They were the picture of poverty with neither room nor lodgings; forced to shelter in a stable outside the entry walls, where animals gave up their manger for the child Jesus. The Christ who was to die on Calvary outside of Jerusalem was born outside of Bethlehem. The message is clear from the very beginning that the love of God is available to all, but especially the poor, the weak and the disadvantaged. The stable is an indication of our need to see grace and goodness in the most deprived of people. As we kneel before the crib, we can pray for

the vision during this short life of ours to see things God's way and for the courage to act according to his will.

Christmas means something only in so far as we welcome the Lord as he comes to us in the wonder of every human being and as he reveals himself in the value and dignity of every person with whom we live and work. One of the things that makes Christmas very special is being remembered by friends. It is essentially a family feast and an occasion for exchanging gifts and sharing the warmth of our homes in the company of friends. Our hearts and our thoughts are especially with family members who are absent and unable to take part in our festivities. God's presence and love can be experienced in healing misunderstandings, patching up quarrels and letting bygones be bygones. Sometimes removing bitterness can be extremely difficult, but forgiving and forgetting will enable us to enjoy our Christmas happiness to the full.

Christmas is also about kindness, about giving and about the returning of love for love. It is the time of year when our hearts are in the right place and when we realize it is more blessed to give than to receive. We become alive and sensitive to the many needs of the poor who are crying out for our generosity and caring. Spare a thought also for those people who find the going tough and whose lives at this particular time are in the shadow of the crib because of a cross or a recent death. Our joy highlights their sadness. May your Christmas be a holy one because if it is, it will be a happy and joyful one.

I invite you, dear Fathers, to enter into these important moments – the season of advent and the season of Christmas - of our Christian living with greater commitment and devotion so that we can reap rich spiritual benefits not only for ourselves but also the people for whom we have dedicated our lives.

CONCLUSION

As we begin the holy season of Advent, let our persistent prayer be– Maranatha - Come, Lord Jesus. Let it resonate in our hearts. Advent is also a time for looking both backward and forward. We

look backward as we prepare to celebrate the historical birth of Jesus. At the same time, we look forward to the Second Coming of Jesus as we get ourselves ready to welcome him into all the areas of our lives during this season.

Although there will be occasions when we can personally wish one another during this month, still let me, through this letter, wish you, dear Fathers, a Merry Christmas and a God-filled New Year 2021. May you have a faith experience of the Babe of Bethlehem as you prepare to celebrate Christmas! May our Blessed Mother intercede for each one of us!

With my prayers and blessings,!

Yours in Christ Jesus

+ George Rajendran SDB

Bishop of Thuckalay

பங்களவில் பாப்புலர் மிஷன் தியானம்

தக்கலை மறைமாவட்டத்துக்குட்பட்ட அனைத்துப் பங்குகளிலும் வின்செந்திய குருக்கள் துறவற சபையால் வெற்றிகரமாக நடத்தப்பட்டு வரும் பாப்புலர் மிஷன் தியானமானது நடத்த தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்கான அறிமுக கருத்துரையும் கலந்தாயவும் 17.11.2020 அன்று நடந்த குருக்கள் கூட்டத்தின் போது நடந்தது. அன்றைய தினம் அருட்தந்தை ஜாண் போஸ்கோ வி.சி. மற்றும் அருட்தந்தை லிஜோ வி.சி. ஆகியோர் கலந்து கொண்டனர். மறைமாவட்டப்பங்குகளில் இத்தியானம் நடத்துவதற்கு அருட்தந்தை மிஜோ புத்தன்புரையில் அவர்கள் உதவுவார்.

Bishop George Rajendran sdb
Diocese of Thuckalay
ஆயர் சார்ஜுமடல்
Bishop's House, P B No: 12,Thuckalay PO, Kanya kumari Dt- 629 175, Tamil Nadu, India

Circular letter No/GR/26/2020

ஈசோ மெசிகாவில் அன்புக்குரிய அருட்தந்தையர்களே, அருட்சகோதரிகளே, இறைமக்களே!

"நீங்கள் தளர்ச்சிக்கு இடம் கொடாமல் நம்பிக்கையாலும் பொறுமையாலும் இறைவாக்குறுதிகளை உரிமைப் பேறாகப் பெற்றவர்களைப்போல் வாழுங்கள்" (எபி. 6:12). இறைவனின் திருவருளால் தக்கலை மறைமாவட்டம் தொடங்கப்பட்டதின் வெள்ளிவிழாவை 2021-ஆம் ஆண்டில் நாம் கொண்டாடவிருக்கிறோம். அதன் தொடக்கமாக ஒவ்வொரு தனிப்பட்ட நபரிலும் ஆன்மீக எழுச்சி உருவாகவேண்டும் என்ற உயரிய நோக்கத்தோடு மறைமாவட்ட யூபிலி தொடக்க விழாவினை நவம்பர் 10, 2019 அன்று படந்தாலுமூடு திரு இருதய ஆலயத்தில் வைத்துத் தொடங்கினோம்.

அன்றைய நாளில் யூபிலி மெழுகுதிரியும் செப அட்டைகளும் வழங்கப்பட்டு ஒவ்வொரு பங்குகளிலும் மெழுகுதிரி ஏற்றி செபிப்பதன் முறைகளும் முக்கியத்துவமும் அறிவுறுத்தப்பட்டன. அதன்படி பங்கு அளவிலான தொடக்கவிழா 24-11-2019 அன்று எல்லா ஆலயங்களிலும் நடைபெற்றது. வெள்ளி விழாவோடு இணைந்து ஜனவர் 21, 2020 அன்று நாகர்கோவில் புனித அல்போன்சா திருத்தல ஆலயத்தில் தமிழக ஆயர்கள் அனைவரும் சேர்ந்து திருப்பலி ஒப்புக்கொடுத்து நமக்காகச் செபித்து, யூபிலி ஆண்டின் செயல் திட்டங்களையும் வெளியிட்டார்கள்.

யூபிலி கொண்டாட்டங்களை நெறிப்படுத்தவும் இறைச்சிந்தனையில் ஒருமுகப்படுத்தவும் ஆன்மவலிமை சேர்க்கவும் "ஆழத்தில் வலைபோடுங்கள்" (லூக். 5:4) என்ற இறை இயேசுவின் வார்த்தையை மையச்சிந்தனையாக எடுத்திருந்தோம். பேதுருவும் உடன் தோழர்களும் இயேசுவின் வார்த்தையை நம்பி வலையைப் போட்டார்கள். "அப்படியே அவர்கள் செய்து பெருந்திரளான மீன்களைப் பிடித்தார்கள்" (லூக் 5:6) என நற்செய்தியில் வாசிக்கிறோம். "ஆழத்தில் வலை போடுங்கள்" என்ற இறை இயேசுவின் வார்த்தைகள் இன்றும் நம் செவிகளிலும் உள்ளங்களிலும், இல்லங்களிலும் ரீங்காரம் இட்டவண்ணமாய் உள்ளன. இவ்வார்த்தைகளின் அழுத்தமும் ஆழமுமே நாம் கடந்துவந்த பாதையை நன்றியோடு நினைக்கவும், நிகழ்காலத்தில் ஆர்வமுடன் வாழவும், எதிர்காலத்தை நம்பிக்கையோடு எதிர்நோக்கவும் நமக்கு அழைப்பு விடுக்கிறது, காரணம் "இயேசுகிறிஸ்து நேற்றும், இன்றும் என்றும் மாறாதவர்" (எபி. 13:8). "ஆழத்தில் வலைபோடுங்கள்" என்னும் இறைச்சொற்றொடரானது யூபிலியின் தயாரிப்புக் காலத்தில், இருவேறு காரியங்களுக்காக நாம் உறுதி

ஏற்றிட நமக்கு அழைப்புவிடுக்கின்றது. முதலாவதாக இறைநம்பிக்கையில் மக்களை ஆழப்படுத்துதல் இரண்டாவதாக, கிறிஸ்துவை அறியாதவர்களுக்கு அவரின் நற்செய்தியை எடுத்துரைத்தல்.

ஆக, தலத்திருச்சபையை இறைநம்பிக்கையில் உறுதியுடன் கட்டியெழுப்பவும், நம்மைச் சுற்றிவாழும் சகோதர சகோதரிகளுக்கு இறையன்பிலிருந்து வழியும் பராமரிப்பின் உதவிக்கரத்தை நீட்டுவதற்கான அழைப்புகளாக அமைந்துள்ளன. இத்தயாரிப்புக் காலத்தில் எதிர்காலத்திற்காகத் திட்டமிடுதலும் அவசியமாயிற்று.

இதற்காக இரு வேறுகேள்விகள் முன்வைக்கப்பட்டன: முதலாவதாக, "நாம் எங்கே இருக்கிறோம்?"; இரண்டாவதாக, "நாம் எவ்விடம் நோக்கிப் பயணிக்கிறோம்?" என்பனவாகும். இவ்விரு கேள்விகளுக்கான தேடல் நீண்டகாலத்தை நம்மிடருந்து கோரியது. ஏராளமான கருத்தமர்வுகள், விவாதங்கள், இறைவேண்டல்கள் ஆகியன அருட்தந்தையர்கள், அருட்சகோதரிகள் மற்றும் பொதுநிலையினரிடையே நடத்தப்பட்டன. இதற்கென தயாரிப்புக் குழு ஒன்று மறைமாவட்ட முதன்மை அருட்தந்தை அவர்களின் தலைமையில் செயலாற்றியது. இக்குழுவால் முன்வைக்கப்பட்ட கருத்துகளும் பரிந்துரைகளும் மீண்டும் பல்வேறு தளங்களில் விவாதத்திற்கு உட்படுத்தப்பட்டன. இப்போது வெளிவந்துள்ள இக்குறு நூலானது நீண்டகால கடின உழைப்பின் "கனி" என்றால் அது மிகையாகாது.

பல்வேறு இயக்கங்களையும், பகுதசங்கங்களையும் தலைமையேற்று நடத்திச் செல்லும் அனைவரும், இந்நூல் கொண்டிருக்கும் செயல் திட்டங்களை நமது மறைமாவட்டத்தின் நலனைக் கருத்திற்கொண்டு முன்னெடுத்துச் செல்ல அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். இச்செயல் திட்டங்கள் பின்வரும் குறிக்கோள்களைக் கொண்டுள்ளன.

1. அருட்தந்தையராகவும் துறவறத்தாராகவும் பொதுநிலையினராகவும் வாழ அழைப்புப் பெற்றிருக்கும் அனைவரும் தத்தமது நம்பிக்கை வாழ்வில் ஆழம் காணுதல்.

2. திருத்தூதுப் பணிக்கான ஆர்வத்தை நமக்குள் தூண்டியெழுப்பி, மறைமாவட்டத்தின் விரிவாக்கப்பட்ட எல்லைகளில் நற்செய்தியைப் பறைசாற்றுதல்.

3. நமது மறைமாவட்டத்தைச் சார்ந்த பொதுநிலையினரிடம் தலைமைத்துவப் பண்புகளை உருவாக்கிட உழைத்தல்.

4. சீரோமலபார் திருச்சபையின் வழிபாட்டு முறைகளையும் மரபுகளையும் பாராட்டி, ஏற்றுவாழப் பயிற்சி பெறுதல்.

இந்நூலில் கூறப்பட்டுள்ள கருத்துக்களையும் செயல் திட்டங்களையும் அனைவரும் கடைபிடிக்கும் நோக்கில் அரைநாள் கருத்தரங்குப் பயிற்சி மறைமாவட்ட அளவில அருட்தந்தையருக்கும், அருட்சகோதரிகளுக்கும், அருட்பணிப் பேரவை உறுப்பினர்களுக்கும் பல்வேறு இடங்களில் பல்வேறு நாட்களில் வழங்கப்பட்டுள்ளது. அதற்கென அனைத்துத் துறைகளையும்

உள்ளடக்கிய எட்டு கண்காணிப்பு குழுக்களும், ஒரு செயற்குழுவும் உருவாக்கப்பட்டுள்ளது. நமது மறைமாவட்ட பங்குகளில் உள்ள அனைத்து உறவிய மக்களுக்கும் இச்செயல் திட்டங்களை அறிவித்து அவர்கள் அதைப் பின்பற்றி ஆன்மீக வாழ்வில் ஆழம் பெறவைத்தலே இதன் நோக்கமாகும். அதற்காகவே இந்நூல் ஒவ்வொரு உறவியங்களுக்கும் வழங்கப்படுகிறது. அதனை உறவிய மக்கள் தத்தமது உறவியங்களிலும், பக்த இயக்கங்களிலும் படித்து, சிந்தித்து அருள் வாழ்வில் வளம் பெற உங்களை அன்புடன் கேட்டுக்கொள்கிறேன். "எனவே, என் அன்பார்ந்த சகோதர, சகோதரிகளே! உறுதியோடு இருங்கள். நிலையாய் நில்லுங்கள். ஆண்டவருக்காக நீங்கள் உழைப்பது வீண்போகாது என்பதை அறிந்து, ஆண்டவரின் பணியை இன்னும் அதிகமாக எப்போதும் செய்யுங்கள்" (1 கொரி 15:58) என்ற பவுலடியாரின் வார்த்தைகள் நம் வாழ்வின் எல்லா நடவடிக்கைகளிலும் இருக்கட்டும்.

மேலும் திருத்தந்தையின் புதிய திருமடலைப்பற்றி உங்களோடு பகிர்ந்து கொள்ள விரும்புகிறேன். சமுதாய நட்புறவு, ஒருமைப்பாடு, உண்மை ஆகியவற்றை அடிப்படையாகக் கொண்ட ஓர் உலகை கட்டியெழுப்ப உதவும் நோக்கத்தில், "அனைவரும் உடன்பிறந்தோர்" என்று பொருள்படும், 'Fratelli tutti" என்ற திருமடலை, அக்டோபர் 4-ஆம் தேதி திருத்தந்தை பிரான்சிஸ் வெளியிட்டார். அசிசி நகர் புனித பிரான்சிசின் திருநாளாகிய அக்டோபர் 04, ஞாயிறன்று மனித உடன்பிறந்த நிலை மற்றும் சமுதாய நட்புறவு ஆகியவற்றை மையப்படுத்தி வெளியிடப்பட்ட, "அனைவரும் உடன்பிறந்தோர்" என்ற இத்திருமடல் இலாபத்தையே மையமாகவைத்த சந்தை வியாபாரம், மனித உரிமைகள், போருக்கும் மரணதண்டனைக்கும் எதிர்ப்பு, மத சுதந்திரத்திற்கு எதிர்ப்பு, மதசுதந்திரத்திற்கான உரிமை போன்றவை குறித்தும் விவாதிக்கிறது.

"பண்டைக்கால மோதல்கள் முடிவுக்கு வந்துவிட்டதாக நம்பிக் கொண்டிருந்த ஒரு காலகட்டத்தில், தற்போது தீவிரவாதிகளும், அடக்கியாள முயலும் தேசியவாதிகளும் முளைவிட்டு வளரத் துவங்கியுள்ளன" எனக் கூறும் திருத்தந்தையின் புதிய திருமடல், திடீரென்று தோன்றிய இந்த கொள்ளைநோய் நாம் அனைவரும் ஒன்றிணைந்தே நம்மை மீட்கமுடியும் என்பதை நமக்கு கற்றுத் தந்துள்ளது எனவும் சுட்டிக்காட்டுகிறது.

"மக்களாட்சி, சுதந்திரம், நீதி போன்றவை படுகாயமுற்று, இலாபத்தை மையமாகக் கொண்ட சந்தை வியாபாரமும், பயன்படுத்தி தூக்கியெறியும் கலாச்சாரமும் இன்றைய உலகை ஆளுகின்றன" என்ற கவலையை வெளியிடும் திருத்தந்தையின் இத்திருமடல், வேலைவாய்ப்பின்மைகள், இனவெறி, ஏழ்மை, அடிமைத்தனம் போன்றவை பெருகிவருவதையும், ஆண் - பெண் உரிமைகளில் சரிநிகரற்ற நிலைகளையும் சுட்டிக்காட்டுகிறது. அனைத்துத் தடைகளையும் தாண்டி நல்ல சமாரியர் போல், நாம் அனைத்து மக்களுக்கும் மிகநெருக்கமாக இருந்து உதவி புரிய வேண்டியதன் தேவையையும் வலியுறுத்துகிறது. இந்தத்திருமடல். நம்மை பிறருக்குக் கொடையாகக் கையளிக்கும் வாழ்வில் தான் நாம் வளர்ச்சியையும், மனநிறைவையும் காணமுடியும் என்பதையும் திருத்தந்தை இத்திருமடலில் வலியுறுத்தியுள்ளார்.

நாடுகளின் வெளிநாட்டுக் கடன்களால்

மக்கள் அனுபவிக்கும் துயர்கள், போர்கள், சித்திரவதைகள், இயற்கைப் பேரிடர்கள் போன்றவைகளால் புலம்பெயர்வோர், மாண்புடன் வாழ்வதற்கு வழிசெய்யும் நல்ல நிர்வாகம், ஆயுத மற்றும் போதைப் பொருள் தடுப்பு, உரையாடல் கலாச்சாரத்தின் தேவை, ஒப்புரவின் அவசியம், மரணதண்டனையை ஒழித்தல், மதச்சுதந்திரம் என பல்வேறு தலைப்புகளில் இத்திருமடலில் தன் கருத்துகளை திருத்தந்தை பிரான்சிஸ் பதிவிட்டுள்ளார்.

நமது மறைமாவட்டத்தின் 24-வது மறைமாவட்டதினத்தை இம்மாதம் (நவம்பர்) 8-ஆம் தேதி ஞாயிறன்று எல்லாப்பங்குகளிலும் பிற்பகல் 3.30 மணிக்கு திருப்பலியோடு கொண்டாடவிருக்கின்றோம். திருப்பலி முடிந்ததும் சுமார் 5.00 மணியளவில் இணையம் வாயிலாக நான் உங்களைச் சந்தித்து உரையாடி செபித்து ஆசிவழங்க உள்ளேன். இதுவரையிலும் இறைவன் நமக்குத் தந்துள்ள அனைத்து நன்மைகளுக்கும் நன்றி கூறுவதோடு, இப்பெருந்தொற்று நோயிலிருந்து இறைவன் நம் எல்லோரையும் காத்து இயல்பான நிலைக்குத் திரும்ப, ஒன்றுகூடி செபித்து அந்நாளை இறை ஆசிமிக்க நாளாக மாற்றுவோம்.

வழக்கமாக நடைபெறுகின்ற அருட்தந்தையர் மற்றும் துறவியருக்கான சங்கமம் இம்மாதம் 14-ஆம் தேதி தக்கலையில் வைத்து சிறிய அளவில் நடைபெற உள்ளது. இதில் பொன் விழா மற்றும் வெள்ளிவிழா கொண்டாடுகின்ற அருட்தந்தையர்களும், அருட்சகோதரிகளும் சிறப்பிக்கப்படுவார்கள். இவ்விழாவில் கியூரியா உறுப்பினர்கள், மறைவட்டஅருட்தந்தையர்கள், துறவறசபைகளின் தலைவர்கள் மட்டுமே கலந்துகொள்வார்கள். விழா நாயகர்களுக்காக செபிக்க உங்களை அன்போடு கேட்டுக்கொள்கிறேன்.

நாம் முன்னெடுக்கும் எல்லாக்காரியங்களிலும் இறைக்கரம் நம்மை வழிநடத்த இறைவனை வேண்டுகிறேன். நம் மறைமாவட்டப் பாதுகாவலியான திருச்சபையின் தாய மரியாவும், நம் தந்தை தூய தோமையாரும் நாம் முன்னெடுக்கும் இப்பயணத்தில் துணைநிற்பார்களாக!

இறைவன் உங்கள் அனைவரையும் நிறைவாக ஆசீர்வதிப்பாராக!

என்றும் ஈசோ மெசியாவில்

மார் ஜார்ஜ் இராஜேந்திரன் ச.ச
தக்கலை மறைமாவட்ட ஆயர்

ஆயர் இல்லம்
30.10.2020

குறிப்பு: இச்சுற்றுமடலை 01.11.2020 ஞாயிறு திருப்பலிக்குப்பின் வாசிக்கவும். இச்சுற்றுமடல் மக்கள் அனைவரையும் சென்றடைய வழிவகை செய்யவும்

Tamil Nadu Bishops' Council (TNBC)
Tamil Nadu Latin Bishops' Council (TNLBC)

ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்காக உழைத்த தந்தை ஸ்டான் சாமி அவர்களுக்கு தமிழக திருஅவை தோழமையை உறுதிப்படுத்தும் நாள்

18 அக்டோபர் 2020 ஞாயிறு

தமிழக இறைமக்கள் அனைவருக்கும் நம் மீட்பர் இயேசுகிறிஸ்துவின் வாழ்த்துக்களும் இறை ஆசீரும் உங்களோடு தங்குவதாக!

தமிழகத்தில் பிறந்து ஜார்கண்ட மாநிலத்தில் ஆதிவாசி தலித் மக்கள் மத்தியில் கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக அர்ப்பணிப்போடு பணி செய்து வந்த அருட்தந்தை ஸ்டனிஸ்லாஸ் லூர்துசாமி என்ற ஸ்டேன் சுவாமி அவர்களைத் தேசிய புலனாய்வு அமைப்பு கடந்த அக்டோபர் 8-ம் தேதி ஜார்கண்ட மாநிலத்தில் உள்ள ராஞ்சியில் கைது செய்தது நமக்குப் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியிருக்கிறது. இந்த நிகழ்வு குறித்து ஊடகங்கள் வாயிலாக இறைமக்களாகிய நீங்கள் அறிய வந்திருக்கிறீர்கள்.

தமிழக ஆயர் பேரவையும், தந்தை ஸ்டேன் சுவாமி அவர்களின் கைதைக் கண்டித்தது 10.10.2020 அன்று அறிக்கையும் வெளியிட்டது. எனினும் இறைமக்கள் அனைவரும் தந்தை ஸ்டேன் சுவாமி கைது குறித்த தகவல்களை அறிந்து கொள்ள வேண்டும் என்பதற்காக நாம் இக்கடிதத்தை எழுதுகிறோம்.

தந்தை ஸ்டேன் சுவாமி அவர்கள் திருச்சி மாவட்டத்திலும், கும்பகோணம் மறை மாவட்டத்திலும் உள்ள விரகாலூர் பங்கில் விவசாய குடும்பத்தில் பிறந்தவர். படிக்கும் போதே துறவி ஆவதற்கு ஆர்வம் கொண்டு இறை அழைத்தலை உணர்ந்து இயேசு சபையில் சேர்ந்து துறவியானார். பீகார் - ஜார்கண்ட மாநிலத்தில் ஆதிவாசிகள் தலீத் மக்கள் அதிகமாக உள்ளனர். அவர்களுடைய வாழ்வு நிலை மிகவும் பின்தங்கியதாக இருந்தது. ஆள்வோரின் செயல்பாடுகள் ஆதிவாசிகளின் நிலத்தை ஆக்கிரமிப்பவர்களுக்கும் அப்பகுதியில் இருந்த இயற்கை வளங்களைச் சுரண்டுபவர்களுக்கும் துணை போவதால் ஆதிவாசி மக்களின் நில உரிமையை தக்க வைக்கவும்

அரசியலமைப்புச் சட்டத்திற்குட்பட்டு சட்டங்கள் வழங்கும் பாதுகாப்பை அடிப்படையாகக் கொண்டு பணி செய்து வந்தார்.

ஆயிரக்கணக்கான ஆதிவாசி இளைஞர்கள் தம் உரிமைகளுக்காகப் போராடியபோது கைது செய்யப்பட்டு சிறையில் அடைக்கப்பட்டனர். பொருளாதாரத்தில் பின்தங்கிய அவர்களால் வழக்கறிஞர் வைத்து கூட வாதாட முடியாத நிலை. இது சம்பந்தமாக ஆராய்ச்சி செய்து அநியாயமாக சிறையில் வாடும் இளைஞர்களை விடுவிக்க ஜார்கண்ட் மாநிலத்தில் உள்ள உயர்நீதிமன்றத்தில் பொதுநல வழக்கு ஒன்றை தாக்கல் செய்தார். இதனால் கோபம் கொண்ட அரசு இவரைப் பழிவாங்க நேரத்தை தேடிக் கொண்டு இருந்தது.

2018-ல் மகாராஷ்டிராவில் உள்ள பீமா-கோரேகான் என்ற போர் நினைவிடத்தில் 200-வது நினைவு தினத்தைக் கொண்டாட தலித் மக்கள் கூடிய போது அதை பொறுத்துக் கொள்ள முடியாத ஆதிக்க சாதியினர் கலவரத்தை தூண்டிவிட்டனர். ஆனால் இந்த கலவரத்திற்கு காரணம் ஆண்டாண்டு காலமாக அடிமைப்பட்டுக் கிடந்த தாழ்த்தப்பட்ட மக்களுடைய விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் ஆதரவு கொடுக்கிற, பேசுகின்ற, எழுதுகின்ற சிந்தனையாளர்களே காரணம் என்று பழி சுமத்தப்பட்டு 15 மனித உரிமையாளர்கள் கைது செய்யப்பட்டனர். நாடு முழுவதும் ஒரே நாளில் திடீரென்று விசாரணை செய்யப்பட்டனர். இவர்கள் இந்திய பிரதமரை கொல்வதற்குத் திட்டமிட்டுள்ளனர் என்றும், தடை செய்யப்பட்ட அமைப்புகளோடு இவர்களுக்குத் தொடர்புள்ளது என்றும் அபாண்ட பழிசுமத்தப்பட்டது. இதே காலக்கட்டத்தில் தந்தை ஸ்டேன் சுவாமி அவர்களையும் "சந்தேகப்படும் நபர்" என்ற அடிப்படையில் இரண்டு முறை மகாராஷ்டிரா காவல் துறை விசாரணை செய்தது. அதற்கு அருட்தந்தை அவர்கள் முழு ஒத்துழைப்பு கொடுத்தார்கள். அதன்பிறகு மகாராஷ்டிரா காவல் துறை எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை. இதற்கிடையில் கடந்த ஜனவரி மாதத்தில் மகாராஷ்டிராவில் ஏற்பட்ட ஆட்சி மாற்றத்திற்குப் பின்பு மத்தியில் ஆளும் பாரதீய ஜனதா கட்சி அல்லாத ஆட்சி அமைந்தது. அந்த அரசு இந்த பீமா-கோரேகான் வழக்கை மறுவிசாரணை செய்ய உத்தரவிட்டது. இந்த சூழ்நிலையில் மத்திய உள்துறை அமைச்சகம் திடீரென்று இந்த வழக்கை என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு அமைப்பிற்கு மாநில அரசை கலந்தாலோசனை செய்யாமல் மாற்றி உத்தரவிட்டது.

என்.ஐ.ஏ. என்ற தேசிய புலனாய்வு அமைப்பு இந்த கொரோனா காலத்திலும் ஜூலை மாதத்தில் நான்கு முறை, ஆகஸ்டு மாதத்தில் ஒரு முறை என்று ஐந்து முறை சுமார் 15 மணி நேரத்திற்கு மேலாக விசாரணை நடத்தியது. அதற்கு அருட்தந்தை ஸ்டேன் சுவாமி தனது 83 வயதிலும் முழு ஒத்துழைப்பு கொடுத்தார். அவர்கள் காட்டிய ஆவணங்களில் உண்மை இல்லை என்றும் ஆணித்தரமாக மறுத்தார். அவரிடம் இருந்து கைப்பற்றப்பட்ட கம்ப்யூட்டருக்குள் இவை எல்லாம் புகுத்தப்பட்டுள்ளது என்ற திட்டவட்டமாக கூறினார்.

கடந்த அக்டோபர் 6-ல் ஜார்கண்ட்டில் உள்ள ராஞ்சியில் இருந்து மகாராஷ்டிரா மாநிலம் மும்பையில் உள்ள என்.ஐ.ஏ. அலுவலகத்தில் ஆஜராக வேண்டும் என்று உத்தரவிட்டனர். அதற்கு அருட்தந்தை அவர்கள் தனது முதுமையையும், தனக்குள்ள நரம்புதளர்வு நோயையும் காரணம் காட்டியும், கொரோனா காலம் என்பதாலும், நீண்ட தூரப் பயணம் செல்ல இயலாது என்பதாலும், வீடியோ கான்பரன்சிங் மூலமாக விசாரணைக்குத் தயாராக இருப்பதாக தெரிவித்தார். ஆனால் அக்டோபர் 8-ந் தேதி சட்டவிரோத நடவடிக்கைகள் தடுப்புச் சட்டத்தின் கீழ் அதிரடியாக கைது செய்யப்பட்டார்.

இரவோடு இரவாக கைது செய்யப்பட்ட அவர் அக்டோபர் 9-ம் தேதி தேசிய புலனாய்வு நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு மும்பைச் சிறையில் அடைக்கப்பட்டுள்ளார். தந்தை ஸ்டேன் சுவாமி அவர்கள் தனது சமூகப்பணியால் ஆதிவாசி மக்களுடைய வாழ்வுநிலையை உயர்த்தியுள்ளார். இவரைப் பாராட்ட வேண்டிய அரசு இவரைக் கைது செய்து அவமானப்படுத்தியிருப்பது வேதனைக்குரியது.கிறிஸ்தவம் எப்போதும் ஒடுக்கப்பட்ட மக்களின் சார்பில்தான் தன் பணியை முன்னெடுத்து வருகிறது. அரசுக்கு அடுத்த நிலையில் கல்வியிலும், மருத்துவத்திலும், சமூகச் சேவையிலும் நமது பங்கு அளவிடமுடியாதது. இவருடைய கைது பழங்குடியினர், தலித் மக்கள், புலம்பெயர்ந்தோர் மத்தியில் பணி செய்யும் கிறிஸ்தவ மறைப்பணியாளர்களை, ஒரு அரசு இப்படித்தான் நடத்துமோ என்ற அச்சத்தை நம்முள் ஏற்படுத்தியுள்ளது.

நம் பெருமான் இயேசுவின் வழியில் ஒடுக்கப்பட்ட மக்களின் மேம்பாட்டிற்காக துணை நிற்பதே உண்மை கிறிஸ்தவம். இதுவே கிறிஸ்தவ வாழ்வின் மையம். தந்தை ஸ்டேன்சுவாமி ஆதிவாசிகளுக்காக, தலித் மக்களுக்காக உழைத்ததை நாங்கள் பெருமையாக கருதுகிறோம். ஆனால் அவர் மீது பொய் வழக்குகளைப் போட்டிருப்பது ஏற்றுக்கொள்ள முடியாதது.

இறையருள்
டிசம்பர் 2020

எனவே வரும் அக்டோபர் 18 ஞாயிறு, நாளை 'ஒடுக்கப்பட்டோரின் உரிமைக்காக உழைத்த தந்தை ஸ்டான் சாமி அவர்களுக்குத் தமிழக திருஅவை தனது தோழமையை உறுதிப்படுத்தும் நாள்' என்று அனுசரிக்க உங்களை அழைக்கிறது. அன்று நாம் ஒவ்வொரு பங்கிலும் தந்தை ஸ்டேன் சுவாமியினுடைய உடல்நலத்திற்காகவும் விடுதலைக்காகவும் திருப்பலியை ஒப்புக்கொடுக்கவும், திருப்பலி முடிந்தவுடன் ஆலயத்திற்கு முன்பாகக் கூடி தந்தை ஸ்டேன் சுவாமியினுடைய கைதைக் கண்டித்து அவரை உடனே விடுதலை செய்யச் சொல்லி கோரிக்கை வைத்து பங்கு அளவிலான நிகழ்வை நடத்தவும் கேட்டுக் கொள்கிறோம். மேலும் தொடர்ந்து ஸ்டேன் சுவாமி அவர்கள் விடுதலை செய்யப்படும் வரை அவரது விடுதலைக்காக செப, தவங்களில் ஈடுபடவும், மனிதநேயமிக்க மற்ற மக்களோடும், தோழமை அமைப்புகளோடும் இணைந்து அமைதியான வழியில் போராடவும் வேண்டிக் கேட்டுக் கொள்கிறோம்.

"நீதியின்பால் பசி தாகம் உள்ளோர் பேறுபெற்றோர், ஏனெனில் அவர்கள் நிறைவு அடைவர்...நீதியின்பால் துன்புறுத்தப்படுவோர் பேறுபெற்றோர் ஏனெனில் இறையரசு அவர்களதே" (மத். 5 : 6,10).

TAMILNADU BISHOP'S COUNCIL
President
Chennai-600 004

+ அந்தோனி பாப்புசாமி

+மேதகு முனைவர் அந்தோனி பாப்புசாமி
பேராயர், மதுரை உயர்மறைமாவட்டம்
தலைவர், தமிழக ஆயர் பேரவை

Velankanni

பேரருட்சகோ. எம். வேளாங்கண்ணி, திஇச,
தலைவர்,
திருஇருதய சகோதரர்கள் சபை,
மற்றும் தமிழக துறவியர் பேரவை.

சிறுமலர்
MISSION LEAGUE

மிஷன்லீக் இயக்கம்

இயற்கை சீற்றங்களாலும் அதனால் ஏற்படுகின்ற தாக்கங்களாலும் நாம் ஒவ்வொருவரும் ஏதாவது ஒரு விதத்தில் பாதிக்கப்பட்டிருப்போம். என்றாலும் நமது விசுவாச வாழ்வில் தடையில்லாதவாறு குடும்பமாக செபிக்கவும் ஒன்று சேர்ந்து கலந்துரையாடவும் ஒருவரையொருவர் ஏற்றுக்கொள்ளவும் ஒன்றாக உணவருந்தவும் கோவில் -19 காலம் நமக்கு மிகவும் பயன்பட்டது. இதை நினைத்து மகிழ்வோம். நமது மிஷன்லீக் இயக்கத்தின் செயல்பாடுகள் தடைபட்டாலும் தற்போது இணையதளம் வாயிலாக மாணவர்களின் திறமைகளை வெளிப்படுத்தும் வாய்ப்புகள் அளிக்கப்பட்டுள்ளன. புனிதர்களைப்பற்றி அறிந்து கொள்ளவும் அவர்களின் வாழ்வை மாதிரியாக ஏற்று வாழவும் இந்நிகழ்வுகள் மாணவர்களுக்கு உதவுகிறது. இந்நிகழ்வுகள் Sirumalar என்னும் இணைய வலைத்தளம் மூலமாக ஒளி பரப்பப்படுகிறது. மேலும் கிறிஸ்மஸ் விழாவை முன்னிட்டு மாணவர்களுக்கு பாடல் போட்டி நடத்தப்படுகிறது. இது தனிப்போட்டியாகும். அனைத்து மாணவர்களும் கலந்து கொள்ளும் போட்டியாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. பரிசு பெறும் மாணவர்களுக்கு முதல் பரிசு ரூ. 1000, இரண்டாம் பரிசு ரூ. 750, மூன்றாம் பரிசு ரூ. 500 என வழங்கப்படும். அனைவரும் கலந்து கொண்டு பயன்பெறவும்.

நவம்பர் மாதம் தொடங்கி, பங்களவில் மிஷன் லீக் இயக்கச் செயல்பாடுகளைத் தொடங்கி நடத்துமாறு அறிவுறுத்துகிறேன்.

வரும் 25 நாட்கள் குழந்தை ஈசோவின் பிறப்புத் திருநாளுக்காக நோன்பிருந்து நம்மை ஆயத்தப்படுத்துவோம். மேலும் ஒவ்வொரு நாளும் நாம் ஜெபிக்கும் ஜெபங்கள் வாயிலாகவும் செய்யும் செயல்கள் வாயிலாகவும் குழந்தை ஈசோவுக்கு பரிசுப் பொருட்களை சமர்ப்பிப்போம். நம் இதயங்களை ஈசோ பிறக்கும் இல்லிடமாக மாற்றுவோம். அனைவருக்கும் இனிய கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகள்.

அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட்
இயக்குநர்

YOUTH APOSTOLATE
இளையோர் பணி

தக்கலை கத்தோலிக்க இளைஞர் இயக்கம்

YOUCAT வகுப்புகள்

தக்கலை இளையோர் இயக்கம் சார்பாக, இணையம் வழியாக, இளையோருக்கான Youcat வகுப்புகள் நடைபெற்று வருகின்றன. மொத்தம் 28 வகுப்புகள் இத்தோடு முடிவடைந்து விட்டன. இளையோர்கள் இதில் ஆர்வத்துடன் பங்கேற்கிறார்கள்.

மறைவட்டப் பொறுப்பாளர்கள் தேர்வு

2020-2021 க்கான மறைவட்டப் பொறுப்பாளர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்கள். இவர்களுக்கானத் தேர்வானது, நவம்பர் மாத ஞாயிற்றுக்கிழமைகளில் நடைபெற்றது. பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுப்பதற்காக பெரும் முயற்சி எடுத்த, மறைவட்ட இயக்குநர் தந்தையர்களுக்கு இயக்கம் சார்பாக மனமார்ந்த நன்றிகளை காணிக்கையாக்குகிறோம். பொறுப்பாளர்கள் விவரம் பின்வருமாறு.

மஞ்சாலுமூடு
மறைவட்ட
செயற்குழு

Manjalumoodu Forane Executives, 2020-2021

TCYM
DIOCESE OF THUCKALAY

Fr. VINOTH
DIRECTOR

Sr. RESHMI SDS
ANIMATOR

MOHAN RAJ
PRESIDENT

ANANTHI
DEPUTY-PRESIDENT

MAHESH
VICE - PRESIDENT

KABEENA
SECRETARY

KABI
JOINT - SECRETARY

ASHICK
TREASURER

NIVIN
COUNCILLOR

ஆறுகாணி
மறைவட்ட
செயற்குழு

Arukany Forane Executives, 2020-2021

TCYM
DIOCESE OF THUCKALAY

Fr. TOJI
DIRECTOR

Sr. SINCY SH
ANIMATOR

PRAVEEN
PRESIDENT

MARTIN
VICE-PRESIDENT

AISHWARYA
SECRETARY

VINCY
JOINT-SECRETARY

BINTU
TREASURER

படந்தாலுமூடு
மறைவட்ட
செயற்குழு
Padanthalumoodu Forane
Executives, 2020-2021
TCYM
DIOCESE OF THUCKALAY
Fr. SUMESH
DIRECTOR
SR SANTHI FCC
ANIMATOR
AJIN
PRESIDENT
JASMINE
VICE PRESIDENT
ANUSHA
SECRETARY
SURIYA
JOINT SECRETARY
PRABU LAL
TREASURER

பிளங்காலை
மறைவட்ட
செயற்குழு
Pilankalai Forane
Executives, 2020-2021
TCYM
DIOCESE OF THUCKALAY
H. THOMAS THEKKETHALA
DIRECTOR
Sr.ELIZA FCC
ANIMATOR
PRADEEP
PRESIDENT
SHERIN
VICE-PRESIDENT
J ABISHA
SECRETARY
JIJI
JOINT - SECRETARY
RASHMA
TREASURER
MARY JENISHA
COUNCILLOR

வரவிருக்கும் நிகழ்வு

12.12.2020 அன்று கிறிஸ்மஸ் கொண்டாட்டம் சூசைபுரம் ஆலயத்தில் வைத்து நடைபெறுகிறது. இதில் குறும்படப் போட்டியும், பாடல் போட்டியும் நடத்தப்படுகிறது. நிகழ்வுகளை, சூசைபுரம் மறைவட்ட இயக்குநர் அருட்தந்தை சுபின் ஸ்கரியா அவர்கள் தலைமையில், சூசைபுர மறைவட்ட இளையோர் ஏற்பாடு செய்வார்கள்.

மறைமவட்டப் பொறுப்பாளர்கள் தேர்வு

மறைமாவட்டப் பொறுப்பாளர்களைத் தேர்ந்தெடுக்கும் நிகழ்வும் தலைமைத்துவப் பயிற்சியும், 29.11.2020 அன்று கல்லுவிளை TCYM அலுவலகத்தில் வைத்து நடைபெற்றது. இதில் மறைவட்ட இயக்குநர்களும் ஊக்குவிப்பாளர்களும் பொறுப்பாளர்களும் இந்நாள் நடுவண் பொறுப்பாளர்களும் பங்கேற்றார்கள். நிகழ்வின் போது, மறைமாவட்ட இயக்குநர் அருட்தந்தை ஜோசப் சந்தோஷ் அவர்கள், தலைமைத்துவத்தின் அடிப்படை இயல்புகள் பற்றிய விளக்கம் அளித்தார். பின்னர், மறைமாவட்டப் பொறுப்பாளர்களுக்கான தேர்தல் நடைபெற்றது.

கூட்டத்தின் இறுதிப் பகுதியில், பங்கேற்ற மறைமாவட்ட குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவத்துப்பறம்பில் அவர்கள், தலைவர்களின் பொறுப்புகளைப் பற்றி விளக்கியதோடு, மரபுகளுக்கு முக்கியத்துவம் கொடுப்பதோடு, முதியவர்களை மதிப்பவர்களாகவும் செயல்பட வேண்டும் என்று அறிவுறுத்தினார். நிகழ்வில் வரவேற்புரையை, மெரின் சுஜித் அவர்களும், அனுபவப்பகிர்வை ஜெனிஷா மற்றும் ரோபின் ஆகியோரும் நடத்தினர். இறுதியில் வீஜி மோள் அவர்கள் நன்றி கூறினார்.

வீஜி,
செயலர்

இல்வாழ்வு இயக்கம்

பாலகன் இயேசு பாரினில் உதித்த பக்குவம் புரியும் மனங்கள் பண்பினில் உயரும். அவர் பாரினில் பட்டதுயர் பண்புடன் அறிந்தல் பாருலகு ஏந்தும் உள்ளத்தால் ஏந்தியே மகிழும். அவர் பிறப்பின் மேன்மை உணர்த்திடும் உண்மை ஏழ்மை ஒருநாள் பாரினில் சிறக்கும். உலகம் ஏந்தியே மகிழும். இன்னல்கள் தீர்க்கும்.

மாதர் ஜோதிஸ் இயக்கம்

MEGA BIBLE QUIZ COMPETITION

ஊரடங்கு நாட்களில் தாய்மார்கள் இறைவார்த்தைகளைக் கற்க வேண்டும் என்ற நோக்குடன் தொடங்கப்பட்ட திருவிவிலிய வினாடி வினாப் போட்டியானது 12 வாரங்கள் நடைபெற்றது. இப்போட்டிகளில் அதிக மதிப்பெண் பெற்றவர்களை தேர்வு செய்து அவர்களுக்கென்று MEGA BIBLE QUIZ COMPETITION இறுதிப்போட்டியாக 2020, நவம்பர் 4 புதன்கிழமை இரவு 8 முதல் 8.30 வரை இணையம் மூலமாக நடத்தப்பட்டது. இப்போட்டியில் 60 க்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றார்கள். இதில் 5 தாய்மார்கள் முழு மதிப்பெண் பெற்றார்கள்.

ஊக்குவிப்பாளர்களுக்கான கூட்டம்

மறைமாவட்ட அளவிலான மாதர் ஜோதிஸ் ஊக்குவிப்பாளர்கள் அனைவருக்குமாக 19.12.2020 அன்று பிற்பகல் 2.20 மணிக்கு கல்லுவிளை இல்வாழ்வு இயக்க அலுவலகத்தில் வைத்து நடைபெறும். இக்கூட்டத்தில் மாதர் ஜோதிஸ் இயக்கப் பொறுப்பாளர்களான கன்னியர் மற்றும் தலைவர்கள் வருகை புரியுமாறு அன்புடன் கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

கரோல் குழு பாடல் போட்டி

வருகின்ற கிறிஸ்து பிறப்பு விழாவை முன்னிட்டு தாய்மார்களுக்கான கரோல் குழு பாடல் போட்டி WhatsApp மூலமாக நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது. குழுப்பாடல் போட்டியில் கலந்து

கொள்பவர்கள் WhatsApp மூலமாக பெயர் பதிவு செய்ய நவம்பர் 29 அன்று கடைசி நாளாக கொடுக்கப்பட்டிருந்தது. இதில் மொத்தம் 35 பங்குகளிலிருந்து 45 குழுக்கள் பதிவு செய்துள்ளனர். இவர்களுக்கு வருகின்ற டிசம்பர் 2 ஆவது வாரம் கரோல் பாடல் போட்டி நடைபெறும்.

திருமண ஆயத்தப் பயிற்சி

திருமணத்திற்காக தயாராகும் இளையோருக்கென திருமண ஆயத்தப்பயிற்சி இளையோரின் வசதிக்கேற்ப விடுமுறை நாட்களான நவம்பர் 14, 15 தேதிகளில் படந்தாலுமூடு திருஇருதய ஆலய வளாகத்தில் வைத்து நடத்தப்பட்டது. முதல் நாள் வகுப்பினை அருட்தந்தை கிறிஸ்துதாஸ் (திருமணம் மற்றும் அருளடையாளங்கள்) அவர்களும் அருட்சகோதரி பிளாஸ்சி மரியா DM (ஆண் பெண் உளவியல்) அவர்களும், அருட்தந்தை பிரின்டோ (திருச்சபைச் சட்டம் மற்றும் குடிமைச்சட்டம்), அருட்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் (திருமணம் பற்றிய இறையியல்) அவர்களும் எடுத்தார்கள். தொடர்ந்து பாவசங்கீர்த்தனம் நடைபெற்றது. இரண்டாம் நாள் காலை திருப்பலி நடைபெற்றது. Dr. பெற்றி (மருத்துவம்) அவர்களும் அருட்தந்தை டென்சி (பொருள் மேலாண்மை), திருமதி மேரி கில்டா (குடும்ப நலம்) ஆகியோரும் வகுப்புகளை நடத்தினர். இதில் 36 இளையோர்கள் பங்கேற்றார்கள். வருகின்ற டிசம்பர் மாதம் 12, 13 தேதிகளில் திருமண ஆயத்தப்பயிற்சி நடத்தத் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இல்வாழ்வு இயக்கம் சார்பாக கிறிஸ்துமஸ் மற்றும் புத்தாண்டு வாழ்த்துகள்

டிசம்பர் மாதம் திருக்குடும்பத்தை சிறப்பான முறையில் நினைக்கும் மாதமாக இருக்கிறது.
கிறிஸ்துமஸ் காலம் என்பது திருக்குடும்பத்தின் காலமாகும்.
நாம் திருக்குடும்பத்தைப் போல வாழ ஆசைப்படுவோம்.
ஆண்டவரின் வருகைக்காக யோசேப்பும் மரியாவும் தங்களை தயாரித்தது போல நாமும் நம்மை தயாரிப்போம்.
குடும்பங்களில் சமாதானம் நிலவுவதற்கு திருக்குடும்பத்தோடு சேர்ந்து செபிப்போம்.
திருக்குடும்பத்தின் பாதுகாவலரான புனித சூசையப்பர் உங்கள் அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.
பிள்ளைகள் பெற்றோருக்கு கீழ்ப்படிந்து குழந்தை இயேசு வாழ்ந்தது போல வாழ வேண்டும். டிசம்பர் 25 க்குப் பிறகு வரும் திருக்குடும்ப விழாவை பங்குத்தந்தை தலைமையில் நல்ல முறையில் கொண்டாட வேண்டும்.

அன்றைய நாளில் குடும்பமாக
கோயிலுக்கு வந்தும்
வராமலிருக்கும் கணவர் அல்லது
மனைவியை கோயிலுக்குக்
கூட்டி வந்து குடும்பமாக
ஆண்டவர் முன்னிலையில்
அர்ப்பணித்தும் செபிப்போம்.
இவை அனைத்தையும்
நல்ல காரியங்களாக
நினைத்து அந்த நாளை
இல்வாழ்வு இயக்க நாளாக
அனுசரிப்போம். திருக்குடும்ப
விழாவை நம்முடைய குடும்ப
விழாவாக நினைத்துக்
கொண்டாடுவோம். உங்கள்
அனைவருக்கும் வாழ்த்துகள்.
உங்கள் அனைவருக்காகவும்
செபிக்கின்றோம். ஆண்டவர்
அனைவரையும் ஆசீர்வதிப்பாராக.

இவண்
அருட்தந்தை ஜிம்மி
தெக்கேகடுமத்தல்,
இயக்குநர், இல்வாழ்வு இயக்கம்

மறைமாவட்ட தினம்

தக்கலை மறைமாவட்டத்தின் 24 ஆவது மறைமாவட்ட தினக் கொண்டாட்டமானது, நவம்பர் 8, 2020 அன்று அனுசரிக்கப்பட்டது. அனைத்து இறைமக்களும் பங்கேற்கும் விதமாக 3.30 மணி அளவில் அனைத்துப் பங்குகுகளிலும் திருப்பலி நடத்தப்பட்டது. வாழ்த்துக்கூட்டம் தக்கலை சங்கமத்தில் நடத்தப்பட்டு அதன் நேரடி ஒளிபரப்பு இணையம் வழியாக நேரலையாக அளிக்கப்பட்டது. அதில் மறைமாவட்ட அனைத்து மக்களும் பங்கேற்கும் விதமாக, அனைத்துப் பங்குகளிலும் காணொளி ஊடகங்கள் ஏற்பாடுச் செய்யப்பட்டிருந்தது. கூட்டமானது மாலை 5 மணிக்கு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. கூட்டத்தின் போது, பிரேஷித தாரம் விருது பெற்ற திரு மரியதாஸ் அவர்களும், மாவட்ட கல்வி அலுவலர் தேர்வில் மாநில அளவில் முதலிடம் பெற்ற திருமதி ஷெர்லின் விமல் அவர்களும் கவுரவிக்கப்பட்டார்கள். மேலும், அருட்தந்தை லிஜோ தெக்கேல் அவர்கள் எழுதி வெளியிட்ட 'ஆன்மீகத்தின் ஆழங்களை நோக்கி' என்னும் நூலும் வெளியிடப்பட்டது. குருகுல முதல்வர் பேரருட்தந்தை தாமஸ் பவ்வத்துப்பறம்பில் முன்னிலை வகித்தார்.

VINCENT-DE-PAUL
வின்செந்தியர்

தக்கலை மத்திய சபை

முழுக்கோடு புனித தோமையார் ஆலய வின்சென்ட் தே பவுல் சபை சார்பாக 22.11.2020 அன்று கடன் உதவி வழங்கும் நிகழ்வு நடைபெற்றது. நிகழ்வில் பங்குத்தந்தை ஆன்றோ துண்டுப்பறம்பில் சி.எம்.ஐ அவர்களும் மஞ்சாலுமூடு வட்டார சபைத் தலைவர் சகோ.ஜார்ஜ் அவர்களும் மத்திய சபை ஆன்மிக ஊக்குவிப்பாளர், சகோ.சசிகலா விஜயகுமாரி அவர்களும் பங்கேற்றார்கள். நிகழ்வில் தேசியத் துணைத்தலைவர் சௌந்தர் ராஜ் அவர்களும் பங்கேற்றார்கள். ஏழை மாணவி ஒருவருக்கு கைபேசியும் ஐந்து ஏழை தாய்மார்களுக்கு சேலையும் வழங்கப்பட்டது.

மறைமாவட்ட பாடற்குழு உறுப்பினர்களுக்கான கூட்டம்

ஆயர் தலைமையில் மறைமாவட்டப் பாடற்குழுவினருக்கான கூட்டம் நவம்பர் 5, 2020 அன்று தக்கலை சங்கமத்தில் வைத்து பிற்பகல் 2.30 மணிக்கு நடைபெற்றது. பங்குத்தளங்களில் பாடற்குழுக்களை உருவாக்குவதைப் பற்றிய முன்வரைவுகள் இக்கூட்டத்தில் வைத்து வரையறுக்கப்பட்டது.

Kanyakumari Social Service Society

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம்

களப்பணியாளர்கள் திறன் மேம்பாடு

KKSSS யின் களப்பணியாளருக்கு வேலைத் திறனை மேம்படுத்தும் வகையில் திறன் மேம்பாட்டுப் பயிற்சியானது KKSSS அரங்கத்தில் வைத்து இயக்குநர் தந்தையின் தலைமையில் இணையம் வழியாக பயிற்சி நடைபெற்றது

அக்டோபர் 31 தேதி இணையம் வழியாக சென்னை லயோலா கல்லூரி பேராசிரியர் முனைவர் திருமதி வோல்டி பாட்ரிக் அவர்கள் கலந்து கொண்டு பயிற்சியளித்தார்கள்.

பெண்களுக்கான சுய தொழில் பயிற்சி

திறன் மேம்பாடு என்ற தலைப்பில் நடைபெற்ற பயிற்சி வகுப்பில் பேராசிரியர் அவர்கள் பேசும் போது பெண்கள் தங்களுடைய சமூக பொருளாதார மேம்பாட்டிற்காக குழுக்கள் மூலமாக தாங்களாகவோ (அ) தொண்டு நிறுவனம் முலம் செயல்படும் அமைப்பு சுய உதவிக்குழு. இந்த குழுக்கள்

மூலம் நீங்கள் இணைந்து எளிதில் முன்னேறலாம். நீங்கள் உயர்வதோடு அக்கம் பக்கத்து பெண்களையும் உயர்த்த முடியும் களப்பணியாளராக நீங்கள் எடுக்கும் முடிவைப் பொறுத்து சமூகம் சார்ந்து சிந்திக்க வேண்டும். மேலும் குழுக்கள் சார்ந்த பிரச்சனைகள், சவால்கள், எதிர்கால திட்டங்கள் குறித்த சந்தேகங்களுக்கு விளக்கம் அளித்தார். இதில் திட்ட அலுவலர்,

களப்பணியாளர்கள் உடன் இருந்தனர். இந்த நிகழ்வை சமூக பணித்துறை மாணவர் நவீன் மற்றும் ஜானிஸ் ஆகியோர் ஒருங்கிணைத்தார்கள்

இளையோர் தொழிற்பயிற்சி

கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் மற்றும் தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழகம் இணைந்து இளையோருக்கான தொழில் பயிற்சி வகுப்புபை நடத்தியது . KKSSS அரங்கத்தில் வைத்து நவம்பர் 5-11 தேதி வரை நடைபெற்றது. KKSSS இயக்குநர் தந்தை தோமஸ் செபஸ்தியான் அவர்கள் தலைமையில் நடைபெற்றது. தந்தையவர்கள் தலைமையுரை மற்றும் ஆசியுரை வழங்கி துவங்கி வைத்தார்கள். சிறப்பு விருந்தினராக தமிழ்நாடு கால்நடை மருத்துவ அறிவியல் பல்கலைக்கழக பேரா முனைவர் செல்வகுமார் M.Svc,Phd அவர்கள் கலந்து கொண்டு பேசும் போது பின்வருவனவற்றைக் குறிப்பிட்டார்.

பட்டியிலே ஆடு பெட்டியிலே பணம் :

வெள்ளாடு வளர்ப்பினை ஒரு தொழிலாகச் செய்து வெள்ளாடுகளுக்கான இருப்பிட வசதி, தீவனம் அளித்தல், குட்டிகள் பராமரிப்பு, நோய்த்தடுப்பு மற்றும் நவீனத் தொழில் நுட்பங்களைப் பின்பற்றுதல் ஆகியவற்றின் மூலம் பண்ணை உற்பத்தியைப் பெருக்கி பொருளாதாரத்தை உயர்த்தலாம் எனவும் கூறினார்.

இரண்டாம் நாள் பயிற்சியானது காலை 10 மணியளவில் துவங்கியது. முனைவர் செல்வ ராஜ் அவர்கள் இன்றைய ஆட்டுக் குட்டியே வருங்கால உணவுத் தேவை மற்றும் வலிமையான சந்ததிகளை உருவாக்கும் தூண்களாக இருக்கும் ஆகவே, இளம் குட்டிகளை கண்ணும் கருத்துமாக பேண வேண்டும் எனவும் தீவன மேலாண்மை பற்றியும் பயிற்சியளித்தார். நான்காம் மற்றும் ஐந்தாம் நாள் பேராசிரியர் முனைவர் செல்வகுமார் அவர்கள் ஆட்டுக்குட்டிகளைத் தாக்கும் நோய்கள் மற்றும் விற்பனை வாய்ப்புகள் பற்றிய பயிற்சியும் அளித்தார். மேலும் அனைவரும் கோழிப்போர்விளை ஆட்டுப்பண்ணையைப் பார்வையிட்டனர். அப்போது ஆட்டைப் பார்வையிட்டு வயதைக் கணக்கிடுதல் மற்றும் ஆட்டின் பராமரிப்பு பதிவேடு போன்றவை பற்றியும் எளிமையாக செயமுறை மற்றும் செயல்முறை பயிற்சியும் வழங்கினார்கள்.

இறுதி நிகழ்வு

கடைசி நாள் நிகழ்வில் கடனுதவி மற்றும் காப்பீடு வசதிகள் பற்றி இந்தியன் வங்கி மேலாளர் திரு. முத்துவேல் அவர்கள் பேசினார்கள். இறுதி நிகழ்வில் KKSSS ஆலோசகர் முனைவர் சத்தியதாஸ் அவர்கள் தலைமையேற்று

சிறந்ததொரு தலைமையுரையாற்றினார். முனைவர் செல்வகுமார் M.Sc,Phd அவர்கள் சிறப்புரையாற்றி சான்றிதழ் வழங்கினார்கள். இதில் 28 பயனாளிகள் பலனடைந்தார்கள்

எழுவோம் இயக்கம்

புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்புக்காக எழுவோம் இயக்க திட்டத்தின் மூலம் KKSSS சார்பில் நஞ்சில்லாத வேளாண்மையை ஊக்குவிக்கும் பொருட்டு கன்னியாகுமரி சமூக சேவை சங்கத்தின் இயக்குநர் தந்தையின் ஆலோசனையில் புற்றுநோய் பாதித்த மக்களுக்கு இலவசமாக 15 விதமான நாட்டு விதைகள் மற்றும் செடி வளர்ப்பு பைகள் வழங்கப்பட்டன. நவம்பர் 26-ம் தேதி KKSSS இன் திட்ட அலுவலர் தலைமையில் குழுவாக நோய் பாதித்த வீடுகளுக்குச் சென்று பார்வையிட்டு திட்டத்தின் குறிக்கோள் பற்றி கூறினார்கள். பிலங்காலை, பிலாங்கரை, பாலப்பள்ளம், முன்சிறை, ஆறுகாணி உட்பட்ட 12 க்கும் மேற்ப்பட்ட மையங்களில் புற்றுநோயாளிகளைப் பார்வையிட்டு நலத்திட்ட உதவிகளும் வழங்கினார்கள்.

புற்றுநோய் விழிப்புணர்வு மற்றும் பாதுகாப்பு

கல்லுவிளை, கன்னியாகுமரி சமூக சேவை சங்கம் சார்பில் காட்டாத்துறை சுய உதவிக்குழுக்கள் இணைந்து புற்று நோய்க்கான விழிப்புணர்வு நிகழ்ச்சி காட்டாத்துறை புனித மிக்கேல் பள்ளியில் நடத்தியது.

"எழுவோம் இயக்கம்" என்ற தலைப்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில்

காட்டாத்துறை, புனித மைக்கேல் ஆலய பங்குத்தந்தை அலெக்ஸ் புதேட் அவர்கள் தலைமையுரையாற்றி தொடங்கி வைத்தார். S.M.H.S.S பள்ளி தலைமையாசிரியர் அருட்சகோதரி எலைசா அவர்கள் ஆசியுரை வழங்கினார்கள். இந்நிகழ்ச்சியில் பேசிய பயிற்சியாளர் திரு.ராஜ சேகர், புற்று நோய் என்பது ஒரு தனிப்பட்ட நோய அல்ல உடலின் வெவ்வேறு உறுப்புகளைப் பாதிக்கும் பல நோய்களின் தொகுப்பு என்றார். புற்று நோயின் ஆரம்ப அறிகுறிகளை நாம் அறிந்தால் எளிதாக குணப்படுத்த முடியும் அத்தோடு தடுக்கவும் முடியும். நம்முடைய பயம் மற்றும் அறியாமை, தாமதமான சிகிச்சை போன்ற காரணங்களால் இறப்பு ஏற்படுகிறது எனவும் இதில் புற்று நோய வகைகள், அறிகுறிகள், காரணம் மற்றும் புற்று நோயை கண்டறிதல் போன்றவை குறித்து பேசினார்கள்.

இந்நிகழ்வு 21-11-2020 அன்று நடைபெற்றது. இம்முகாமில் காட்டாத்துறை சுய உதவிக்குழுவைச் சார்ந்த பெண்கள் கலந்து கொண்டனர். இந்நிகழ்வை களப்பணியாளர் திருமதி சுதா ஒருங்கிணைத்தார்.

சமூகப்பணித்துறை மாணவர்கள்:

மலங்கரை கத்தோலிக்கக் கல்லூரி மாணவர்களின் ஒருநாள் களப்பணி கருத்தரங்கு 27-11-2020 அன்று KKSSS அரங்கத்தில் வைத்து நடைபெற்றது. பயிற்சி மாணவர்களுக்கு KKSSS இயக்குநர் தந்தை அவர்கள் KKSSS - ன் பணிகளைப் பற்றி மாணவர்களுக்கு விரிவாகவும் விளக்கமாகவும் எடுத்துக் கூறினார்கள். மலங்கரை கத்தோலிக்கக்கல்லூரி பேராசிரியர்கள் மற்றும் மாணவர்கள் உட்பட 25 நபர்கள் கலந்து கொண்டனர்.

அருட்தந்தை எபின் பூவத்துமூட்டில்

இயக்குநர்

மஞ்சாலுமூடு சமுகக்கூடம் மற்றும் கல்லறைத்தோட்டம் மந்திரிப்பு

மஞ்சாலுமூடு சிறுமலர் ஆலயத்தில் கூடுதலாக சமுகக்கூடம் ஒன்று கட்டப்பட்டது. அத்தோடு அர்ச்சிப்புக்கு தயாராகி வரும் புதிய கோயிலின் அருகாமையில் கல்லறைத்தோட்டம் ஒன்று அமைக்கப்பட்டது. இவ்விரண்டின் மந்திரிப்பை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள், பங்குத்தந்தை அகஸ்டின் தலோடில் முன்னிலையில் 29.11.2020 அன்று காலை 7 மணி அளவில் நடந்தி தொடர்ந்து திருப்பலியை நிறைவேற்றினார்.

தமிழ்வழிக் கல்விக் கூடங்கள்

தமிழக அரசு அண்மையில் மருத்துவக் கல்லூரி சேர்க்கையில் அரசுப் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீடு வழங்கியுள்ளது. வரவேற்கத்தக்க இந்தக் கொள்கை முடிவினால் தமிழகம் முழுவதும் அரசுப் பள்ளிகளில் பயிலும் நூற்றுக்கணக்கான ஏழை எளிய மாணவர்கள் இந்த ஆண்டே மருத்துக் கல்லூரிகளில் சேர்ந்து பயன் பெறுவார்கள் என்பது மகிழ்ச்சிக்குரிய ஒன்று. நீட் போன்ற மிகக் கொடுமையான தேர்வுகள் கட்டாயமயமாக்கப்பட்ட பின்னர் தமிழகத்தில் அரசுப் பள்ளிகள் மற்றும் அரசு உதவிபெறும் பள்ளிகளிலிருந்து மருத்துவக் கல்விக்காக விண்ணப்பிக்கும் ஆயிரக்கணக்கான ஏழை எளிய கிராமப்புற ஒடுக்கப்பட்ட பிற்படுத்தப்பட்ட வகுப்பு மாணவ மாணவியருக்கு இந்த வாய்ப்பு கடந்த மூன்று ஆண்டுகளாக முற்றிலுமாக மறுக்கப்பட்டு வருகிறது. இந்நிலையில் தமிழக அரசின் இந்தக் கொள்கை முடிவு பாராட்டத்தக்க ஒன்று. தமிழக ஆளுநர் இந்தக் கொள்கை முடிவினை பல மாதங்களாக கிடப்பில் போட்டாலும் தமிழக அரசு இந்த முடிவினை துணிச்சலோடு எடுத்திருப்பது வரவேற்கத்தக்கது.

ஆனால் தமிழக அரசு வெளியிட்டுள்ள இந்த கொள்கை முடிவில் அரசு உதவி பெறும் பள்ளிகள் விடுபட்டிருப்பது வியப்பாகவும் வருத்தமாகவும் உள்ளது. தமிழகத்தைப் பொறுத்தவரை பெரும்பாலான அரசு உதவிபெறும் பள்ளிகள் கிறிஸ்தவ திருச்சபைகளால் நடத்தப்பட்டு வருகின்றன. இப்பள்ளிகளில் பயிலக்கூடிய மாணவ மாணவிகளில் பெரும்பாலானோர் மிகவும் பின் தங்கிய நலிவுற்ற நிலையில் இருக்கும் குடும்பங்களைச் சார்ந்தவர்களே. எனவே தமிழக அரசு அறிவித்தக் கொள்கை முடிவில் மருத்துவக் கல்லூரிகளுக்கான சேர்க்கையில் அரசுப்பள்ளி மாணவர்களுக்கு 7.5 விழுக்காடு இட ஒதுக்கீட்டோடு அரசு உதவிபெறும் பள்ளிகளையும் இணைத்து கூடுதல் இடங்களை ஒதுக்கியிருக்க வேண்டும்.

அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களின் சமூகப் பொருளாதார நிலையும் அரசுப் பள்ளிகளில் பயிலும் பெரும்பாலான மாணவர்களின் சமூகப் பொருளாதார பின்னணியும் ஏறக்குறைய ஒரே நிலையில்தான் உள்ளது என்பதை யாரும் மறுக்க இயலாது. எனவே தமிழக அரசு இந்த எதார்த்த சூழலை கணக்கில் கொண்டு, அரசு உதவிபெறும் பள்ளிகளில் பயிலும் மாணவர்களுக்கும் மருத்துவக்

கல்லூரிச் சேர்க்கையில் 7.5 விழுக்காடு வழங்கிட வேண்டுமென்று நமது மறைமாவட்டம் சார்பில் அனைத்து பள்ளிகளின் தாளாளர் அருட்தந்தை ஜாண் பால் அவர்கள் 10.11.2020 அன்று மாண்புமிகு தமிழக முதல்வரை நேரடியாக சந்தித்து மனு வழங்கினார். மேலும்

இது தொடர்பாக கன்னியாகுமரி மாவட்டத்திலுள்ள நான்கு கத்தோலிக்க மறைமாவட்டங்கள் சார்பாக மாண்புமிகு எதிர்கட்சி தலைவருக்கும் 24.11.2020 அன்று நேரடியாக மனு வழங்கப்பட்டது.

அருட்தந்தை ஜாண் பால்

அனைத்துப் பள்ளிகள் தாளாளர்.

காரோடு சமுகக் கூடம் மந்திரிப்பு

காரோடு புனித சூசையப்பர் ஆலயம் இவ்வாண்டு பொன்விழா கொண்டாடுகிறது. இதன் பகுதியாக, சமூக நலக்கூடம் ஒன்று கட்டப்பட்டது. இதன் மந்திரிப்பு நவம்பர் 22, 2020 அன்று தக்கலை ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்களால் பங்குத்தந்தை அஜீஷ் அட்டியில் முன்னிலையில் நடத்தப்பட்டது

கூரியா செய்திகள்

அருட்தந்தை கிறிஸ்துதாஸ் அவர்கள் கழுவந்திட்டை மார்ட்டின் டி போரஸ் பங்கின் பங்குத்தந்தையாக 12.11.2020 அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

அருட்தந்தை ஷோஜோ இருபத்திஞ்சில்சிற அவர்கள் கிறிஸ்துராஜபுரம் கிறிஸ்து அரசர் ஆலயத்தின் பங்குத்தந்தையாகவும், ஜெய மாதா பள்ளிக்கூடத்தின் துணை தாளாளராகவும் 12.11.2020 அன்று நியமிக்கப்பட்டுள்ளார்.

வட்டக்கோட்டை மறைத்தூதுத்தளம்

வட்டக்கோட்டையில் நடந்து வந்த மறைத்தூதுப் பணிகளின் விளைவாக ஒரு குடும்பம் திருமுழுக்குப் பெற்று உறுப்பினாரகியுள்ளது. இத்தளமானது ஆரோக்கிய அன்னை மறைத்தூதுத் தளம் என உயர்த்தப்பட்டு, கிறிஸ்தவ சமூகத்தை உருவாக்க அனுமதியையும் பெற்றுள்ளது.

அருட்தந்தை குரியாக்கோஸ் மங்கலத் (லின்ஸ்லால் அகுஸ்தி) அவர்கள் குருத்துவம் சார்ந்த பணிகள் செய்வதில் தடை ஏற்படுத்தப்பட்டுள்ளது. அவர் மறைமாவட்ட குருவாக கருதப்படமாட்டார். அவர் குரு என்னும் நிலையில் எவ்விடத்திலும் வழிபாடுகளில் பங்கேற்க தடைவிதிக்கப்பட்டுள்ளது.

இறையழைத்தலை ஊக்குவித்தல்

மறைமாவட்ட அளவில் இறையழைத்தலை ஊக்குவிக்கும் நோக்குடன் ஒவ்வொரு மறைவட்டத்திற்குமென இளங்குருக்கள் ஊக்குவிப்பாளர்களாக நியமிக்கப்பட்டுள்ளார்கள்.

குழந்தை ஈசோ இயக்கம்

குழந்தைகளின் ஆன்மீக வாழ்வை மேம்படுத்துவதற்காக ஒவ்வொரு வாரமும் குழந்தைகளுக்கு இறைவார்த்தைகள் WhatsApp மூலம் பயிற்றுவிக்கப்படுகிறது.

ஊக்குவிப்பாளர்கள், பொறுப்பாளர்கள் மற்றும் அனைத்து குழந்தைகளுக்கும் கிறிஸ்மஸ் மற்றும் புத்தாண்டு நல்வாழ்த்துகளை தெரிவித்துக் கொள்கிறேன்.

அருட்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில்

இயக்குநர்

BIRTHDAYS OF REV FATHERS	
BIRTH DAYS - DECEMBER - 2020	
Fr. Alex Puthettu	17
Fr. Joseph Anithottam CMI	18
Fr. Antony Jose	18
Fr. Matheus Robert	26
Fr. Rony Peedikakal MCBS	26
FEAST DAYS OF REV FATHERS	
FEAST DAY - DECEMBER - 2020	
Fr. Abilash Xavier Raj S.	03
Fr. Joshy Kulathumkal	27
Fr. John Thekkel	27
Fr. Subin Puthenpurackal	27
Fr. John Joseph	27

மறைமாவட்டத் தகவல்கள்

வின்செந்திய துறவறச் சபையின் மாகாணத்தலைவர் 18.11.2020 அன்று தூத்துக்குடி மறைத்தொண்டுப் பகுதிகளைப் பார்வையிட்டார். வின்செந்தியத் தந்தையர்கள், தூத்துக்குடி பகுதியில் மறைத்தொண்டு தொடங்க ஒப்புக்கொண்டுள்ளார்கள்.

அருட்சகோதரிகளுக்கான தமிழ் வகுப்புகள் 21.11.2020 அன்று அதிகாரபூர்வமாகத் தொடங்கியது. கல்லுவிளை கருணாலயத்தில் வைத்து காலை 10 மணி முதல் பிற்பகல் 3 மணி வரை நடைபெற்றது. இது அனைத்து சனிக்கிழமைகளிலும் நடைபெறும். திரு கமல செல்வராஜ் அவர்கள் வகுப்புகளை நடத்துகிறார். இதில் 36 அருட்சகோதரிகள் பங்கேற்கின்றனர்.

அருட்தந்தை அனில் ராஜ் அவர்கள் மதுரையில் மறைத்தூதுப் பணிப் பொறுப்பில் நியமிக்கப்பட்டுள்ளார். 24.11.2020 முதல் தொடங்கி மதுரையில் புதூர் என்னும் இடத்தில் வாடகை வீட்டில் தங்கித் தனது பணிகளைத் தொடங்கி உள்ளார். இவ்விடத்தின் அதிகாரபூர்வமான மந்திரிப்பு 13.12.2020 அன்று நடைபெறும்.

குருக்கள் மற்றும் துறவியர் சங்கமம்

இவ்வாண்டைய குருக்கள் மற்றும் துறவியர் சங்கமமானது தக்கலை சி.எம்.சி. மாகாண இல்லத்தில் வைத்து நவம்பர் 14, 2020 அன்று எளிய முறையில் நடத்தப்பட்டது. திருப்பலி காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகி தொடர்ந்து எளிதான பொதுக்கூட்டத்துடன் முடிவடைந்தது. இதில் துறவற வாழ்வில் பொன்விழா காணும் அருட்சகோதரி ஆலிஸ் விஜி சி.எம்.சி, அருட்சகோதரி செலிகுரின் சி.எம்.சி, அருட்சகோதரி எல்சி கரோலின் எஸ்.எச், அருட்சகோதரி பென்சி ஆன் எஸ்.எச், அருட்சகோதரி ரோசலின் ஜோஸ் எஸ்.எச், அருட்சகோதரி எலிசபெத் எஸ்.ஏ.பி.எஸ், அருட்சகோதரி ரோஸ் செபாஸ்டின் எஸ்.டி.எஸ், அருட்சகோதரி பிரான்சிஸ் மேரி எஸ்.டி.எஸ், அருட்சகோதரி மேரி போஸ்கோ எஸ்.டி.எஸ் ஆகியோருக்கும், குருத்துவ வெள்ளிவிழா காணும் அருட்தந்தை மாத்யு முளங்ஙாசேரில் எம்.எஸ்.டி, அருட்தந்தை ஜோசப் ஆனித்தோட்டம் சி.எம்.ஐ, அருட்தந்தை பாபு தட்டில் சி.எம்.ஐ. ஆகியோருக்கும், துறவற வாழ்வின் வெள்ளிவிழா காணும், அருட்சகோதரி ப்ரீதா தெரஸ் எஸ்.எச், அருட்சகோதரி ஆன்ஸ் மரியா எஸ்.எச், அருட்சகோதரி மேரி பீனா எல்.எஸ்.டி.பி, அருட்சகோதரி மேரி ஜெய்மி எல்.எஸ்.டி.பி ஆகியோருக்கும் வாழ்த்துக்கள் தெரிவிக்கப்பட்டன.

புனித மரியன்னை இளங்குருமடம்

முக்கூட்டுக்கல் புனித மரியன்னை இளங்குருமடத்தில் நவம்பர் 30 ஆம் தேதி மாலை 6 மணிக்கு புனித மரியின் இரவு என்னும் நிகழ்வு நடந்தது. இந்நிகழ்வானது அன்னை மரியின் மீது பக்தியை வளர்த்தவும் அவரோடுள்ள அன்பை வெளிக்கொணரவும் நடத்தப்பட்டது. இந்நிகழ்வில் தக்கலை மறைமாவட்ட ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் பங்கேற்றார். குருகுல முதல்வரும் இளங்குருமட அதிபர் மற்றும் அருட்தந்தையர்களும் கன்னியர்களும் அருட்சகோதரர்களும் கலந்து கொண்டார்கள். நிகழ்வானது மாலை செபமாலையுடன் ஆரம்பமானது. பின்னர் அருட்சகோதரர்களுக்காக வினாடி வினா போட்டியும் இதர போட்டிகளும் நடத்தப்பட்டன. அனைத்தும் மரியன்னையை மையப்படுத்தியதாக அமைந்தது. மேலும் கலைநிகழ்வுகளும் நடத்தப்பட்டன. இவற்றில் அனைவரும் ஆர்வமுடன் கலந்துகொண்டனர். ஏறக்குறைய இரண்டு மணி நேரம் இந்நிகழ்வு நடைபெற்றது. இறுதியில் அனைவருக்கும் விருந்து அளிக்கப்பட்டது.

அருட்தந்தை ஜோஷி குளத்துங்கல்,

இளங்குருமட அதிபர்

மறைவட்டச் செய்திகள்

நித்திரவிளை

புனித ஜார்ஜியார் திருத்தலம் – முஞ்சிறை

அக்டோபர் மாதம் செபமாலை அன்னைக்காக ஒதுக்கப்படும் மாதம். அன்னையின் அருள்வேண்டும் காலம். இதன் அடிப்படையில் முஞ்சிறை ஜார்ஜியார் ஆலயத்தில் அக்டோபர் 19 முதல் பத்து நாட்கள் சிறப்பு திருப்பலியும் செபமாலையும் புகழ்மாலையும் ஏறெடுக்கப்பட்டது. பத்து நாட்களும் வெவ்வேறு உறவியங்களும் பக்த இயக்கங்களும் சிறப்பித்தன. பத்தாம் நாள் அன்று சிறப்பு நற்கருணை ஆராதனையும் செபமாலை பவனியும் நடைபெற்றது. இந்நாட்களில் ஏராளமான மக்கள் கலந்து கொண்டு இறையாசீர் பெற்றனர்.

அக்டோபர் 27,28,29 தேதிகளில் சிறப்பு ஒப்புரவு வழிபாடு நடைபெற்றது. புனித ஜார்ஜியார் திருத்தலத்தின் 49 ஆவது ஆண்டுவிழாவும் பொன்விழா தொடக்க விழா கொண்டாட்டமும் 30 முதல் நவம்பர் 2 வரை நடைபெற்றது.

திருவிழாவின் முதல் நாள் நிகழ்வுகள் மாலை 4.30 மணிக்கு செபமாலையுடன் ஆரம்பமானது. 5 மணிக்கு பங்குத்தந்தை ஜோமோன் மங்கலாமடத்தில் அவர்கள் கொடியேற்றினார்கள். பின்னர் புனித ஜார்ஜியார் நவநாள் நடைபெற்றது. அன்றைய தினம் ஆயர் அவர்கள் வருகைபுரிந்தார்கள். அவருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. ஆயர் தலைமையில் நடைபெற்ற ஆடம்பரத் திருப்பலியின் வேளையில், அனைத்து பக்த சங்கங்களின் உறுப்பினர்கள் காணிக்கைப் பவனி நடத்தினார்கள். பொன்விழா கொண்டாட இறைவன் அருளிய வாய்ப்புக்காக நன்றி கூறியதோடு, பொன்விழாவை மையப்படுத்தி மறையுரையை ஆயர் அவர்கள் வழங்கினார்கள். திருப்பலியின் இறுதியில் பொன்விழா சிறப்பு மெழுகுதிரி ஏற்றப்பட்டு சிறப்பு செபமும் சொல்லப்பட்டது. பின்னர், முஞ்சிறை பங்கிலிருந்து குருவானவராக மாறிய, அருட்தந்தை ராபின் ஜோஸ் அவர்கள் வெளியிட்ட "காவலாய் இருப்பாய் ஜார்ஜியாரே" என்னும் பாடல் வெளியிடப்பட்டது.

இரண்டாம் நாள் திருப்பலியை பங்கின் முதல் குரு ராபின் ஜோஸ் அவர்கள் தலமையேற்று நடத்தனார்கள். அருட்தந்தை ஷோஜோ இருபத்திஞ்சில்சிற அவர்கள் சிறந்ததொரு மறையுரை வழங்கினார்கள். இரவு 8 மணியளவில் புதிய குருவுக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது. திரு. வின்சென்ட் ராஜ் அவர்கள்

புதிய குருவை வாழ்த்திப்பேசினார்கள். பின்னர் பாடற்குழு வாழ்த்துப்பாடல் பாடியது. அருட்தந்தை அவர்கள் ஏற்புரை ஆற்றினார். திரு. சுகுமாரன் அவர்கள் அனைவருக்கும் நன்றி கூறினார். நிகழ்வில் அருட்தந்தை அஜீஷ் அட்டியில் அவர்கள் சிறப்பு விருந்தினராக பங்கேற்றார்.

மூன்றாள் நாள், அருட்தந்தை அலெக்ஸ் புத்தேட் அவர்கள் தலைமையில் இராசா திருப்பலி நடைபெற்றது. அருட்தந்தை டோபின் ஆலப்புரைக்கல் அவர்கள் மறையுரை ஆற்றினார். அருட்தந்தை ஜினோய் தொட்டியில் அவர்கள் திருப்பலியில் பங்கேற்றார். திருப்பலிக்குப் பின்னர், கோயிலைச் சுற்றி பவனியும் திருக்கொடி இறக்குதல் நிகழ்வும், அன்பின் விருந்தும் நடைபெற்றது.

நான்காம் நாள், இறந்தவர்களுக்கான சிறப்புத் திருப்பலியை பங்குத்தந்தை ஜோமோன் மங்கலாமடம் அவர்கள் நிறைவேற்றினார்கள்.

கிறிஸ்து அரசர் ஆலயம் – கிறிஸ்துராஜபுரம்

17.10.2020 முதல் 31.10.2020 வரை 15 நாட்கள் ஜெபமாலை வணக்கமாதம் சிறப்பாக, கிறிஸ்து அரசர் ஆலயம் கிறிஸ்துராஜபுரத்தில் வைத்து நடைபெற்றது. ஒவ்வொரு நாளும் செபமாலை, புகழ்மாலை திருப்பலி ஆகியன நடைபெற்றன. இறுதி நாளின் போது, சிறப்பு நற்கருணை ஆராதனை, செபமாலை பவனி மற்றும் ஆடம்பரத் திருப்பலி ஆகியன நடைபெற்றன. ஏராளமான மக்கள், வழிபாடுகளில் பங்கேற்று இறையாசீர் பெற்றனர். அனைத்து ஏற்பாடுகளையும் பங்குத்தந்தை ஜோஸ் முட்டத்துப்பாடம் அவர்கள் ஒருங்கிணைத்து நடத்தினார்.

12.11.2020 அன்று அருட்தந்தை ஷோஜோ இருபத்தஞ்சில்சிற அவர்கள் பங்குத்தந்தையாகப் பொறுப்பேற்றார்.

17.11.2020 முதல் 22.11.2020 முடிய ஆறு நாட்கள் கிறிஸ்து அரசர் திருவிழா கொண்டாடப்பட்டது. 17.11.2020 அன்று பங்குத்தந்தை அவர்கள் திருக்கொடியேற்றித் திருவிழாவைத் தொடங்கி வைத்தார். அன்றைய தினம் அருட்தந்தை ஜோமோன் அவர்கள் திருப்பலி நிறைவேற்றினார்கள். 18,19,20 தேதிகளில் சினாய் குழுவினரின் தியானமானது நடைபெற்றது. ஐந்தாம் நாள் ஆடம்பரமான திருப்பலிக்குப் பின்னர் திருப்பவனி நடைபெற்றது. அன்றைய தினம் மறைக்கல்வி மாணவர்களுக்கான பரிசுகளும் வழங்கப்பட்டன. ஆறாம் நாள் திருவிழா ராசா திருப்பலியுடன் சிறப்பிக்கப்பட்டது. கொடியிறக்கப்பட்டு, அனைவருக்கும் அன்பின் விருந்து அளிக்கப்பட்டது.

தூசைபுரம்

கிறிஸ்து அரசர் ஆலயம் பாலப்பள்ளம்

நவம்பர் 1 மற்றும் 8 ஆம் தேதிகளில் முறையே பங்கு பிரதிநிதிகள் மன்றமும் பொதுமன்றமும் நடந்தன. திருவிழா 10 நாட்கல் நடத்த ஏற்கனவே தீர்மானிக்கப்பட்டதால், 7 குழுக்கள் தேர்வு செய்யப்பட்டனர். ஒருங்கிணைப்புக் குழுவில் திரு. தோமஸ், திரு. அருள் மற்றும் திரு. மோகன்தாஸ் ஆகியோரும் பிற குழுக்களும் தேர்வு செய்யப்பட்டு குழுக்களுக்கான பணிகளும் பிரித்தளிக்கப்பட்டது.

விவிலிய வினாடி வினாப் போட்டி

8.11.2020 அன்று விவிலிய வசனம் எழுதும் போட்டி நடைபெற்றது. திருப்பாடல்கள் மனப்பாடம் செய்து அதிக அதிகாரங்கள் எழுதியவர்கள் பரிசுக்குரியவர்களாக தேர்ந்தெடுக்கப்பட்டார்கள். காலை சுமார் 9.30 மணிக்கு தொடங்கிய போட்டி மதியம் 1.30 மணிவரை தொடர்ந்து நடைபெற்றது. போட்டியில் 15க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.

நினைவுப் பரிசு வழங்குதல்

கொரோனா காலக்கட்டத்தில் நடைபெற்ற விவிலிய வினாடி வினாப் போட்டியின் நினைவுப் பரிசு மற்றும் போட்டியில் முதலிடம் பெற்றவர்களுக்கான பரிசளிப்பு விழா நவம்பர் 22 ஆம் தேதி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது. பாதுகாவலர் விழா நிறைவில் பரிசு வழங்கப்பட்டது.

ஏறக்குறைய 6 மாத காலம் நடைபெற்ற விவிலியப் போட்டியானது தினமும் இரவு 8 மணிக்கு நடைபெற்றது. இதில் தினமும் 3 அதிகாரங்கள் வாசித்து அதிலிருந்து வினாக்கள் கேட்கப்பட்டு புள்ளிகள் குடும்பம் மற்றும் உறவியம் வாரியாக வழங்கப்பட்டது. அதில் முதல் 5 இடங்கள் பெற்றவர்களுக்கும் புதிய ஏற்பாட்டு நூல் முழுவதையும் வாசித்து முடித்த குடும்பங்களுக்கு நினைவுப் பரிசும் ஆயர் அவர்கள் வழங்கினார். 75 க்கும் மேற்பட்ட குடும்பங்கள் பங்கெடுத்தனர். அதில் 26 குடும்பங்கள் நினைவுப்பரிசும் பெற்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. போட்டி நடைப்பெற்ற விதத்தை திருமதி கஸ்தூரி விளக்கி உரையாற்றினார். இதனை சிறப்புடன் நடத்திய பங்குத்தந்தை ஜாண்பால் அவர்களைப் பாராட்டி மேதகு ஆயர் மார் ஜார்ஜ் இராஜேந்திரன் அவர்கள் பொன்னாடை அணிவித்து கவுரவித்தார்.

ஆலயத்திருவிழா

நவம்பர் 13 அன்று திருக்கொடியேற்றத்துடன் ஆரம்பமான பாதுகாவலர் விழா 10 நாட்கள் மிகச் சிறப்பாக கொண்டாடப்பட்டு அன்பின் விருந்து மற்றும் ஆயரின் தலைமையில் திருப்பலி மரக்கன்று நடும் விழா கொடியிறக்கம் என தொடர்ந்து நடந்து 22 ஆம் தேதி நிறைவடைந்தது. முதல் நாள் கல்லறைவடிவம் ஆலயத்தன் நடுவில் உருவாக்கி இறந்தோருக்கான திருப்பலி நிறைவேற்றியதும், ஒவ்வொரு நாளும் திருப்பிலியின் தொடக்கத்தில் நடைபெற்ற மெழுகுவர்த்தி பவனியும், 3 ஆம் நாள் நடைபெற்ற இராசாத் திருப்பலியும் புது அனுபவமாக இருந்தது. 8 ஆம் நாள் நற்கருணை ஆராதனையும், 9 ஆம் நாள் பவனியும் நடைபெற்றது. திருவிழா நாட்களில் வெளியேயிருந்து தந்தையர்கள் அழைக்கப்பட்டு, ஒப்புரவு அருளுடையாளம் நிறைவேற்றப்பட்டது.

தக்காளிவிளை திருக்குடும்ப ஆலயம்

29.11.2020 அன்று பங்குத்தந்தை சுபின் ஸ்கரியா அவர்கள் தலைமையில் பங்குப்பேரவை கூட்டம் நடைபெற்றது.

கிள்ளியூர் சேவ மாதா ஆலயம்

- 08.11.2020 அன்று பங்குத்தந்தை ஜிம்மி தெக்கேகடுமத்தில் அவர்கள் தலைமையில் பங்குப்பேரவைக்கூட்டம் நடைபெற்றது.
- 01.11.2020 அன்று மறைக்கல்வி கோயிலில் வைத்து நடைபெறத் தொடங்கியது.
- 29.11.2020 அன்று திருப்பலிக்குப் பின் 8.30 மணியளவில் மாதர்ஜோதிஸ் கூட்டம் பங்குத்தந்தை தலைமையில் நடைபெற்றது. தொடர்ந்து மறைக்கல்வி ஆசிரியர்கள் கூட்டமும் நடைபெற்றது.

BISHOP'S ENGAGEMENTS DECEMBER 2020

DATE	DAY	TIME	EVENTS
1	Tue	10.00 am 04.00 pm	Kalluvilai: Priests' Adoration Curia meeting
2	Wed	06.00 pm	Pallikkonam: Visit and Holy Qurbana
3	Thu	09.30 am	Sangamam: Pastoral Council meeting
4	Fri	10.00 am 02.00 pm	Thirunelveli: Trust meeting Nanguneri: JMJ farm meeting
5	Sat		Bishop's House: Meeting with priests
6	**Sun**	**07.30 am 04.30 pm**	**Paraicode: First Holy communion Holy Qurbana Kaliyal: Youth gathering and inauguration**
7	Mon	04.00 pm 06.00 pm	Kottar: Meeting at Bishop's House Mankarai: Parish visit
8	Tue	06.00 pm	Pilankarai: Parish visit
9	Wed	09.00 am 06.00 pm	Curia Meeting Killiyoor: Parish visit and Holy Qurbana
10	Thu	05.30 pm 08.00 pm	Kudukachivilai: Holy Qurbana Paramanvilai: Marriage reception
11	Fri		Bishop's House
12	Sat	10.00 am 12.30 pm 06.00 pm	Sangamam: Pre-Christmas gathering with the heads of the institutions Sangamam: Meeting with Kozhiporvilai Staffs Thenkasi: Pre-Christmas gathering with Missionaries

13	**Sun**	**08.30 am 12.00 pm**	**Madurai: Holy Qurbana and Pre-Christmas gathering Pudur, Madurai: Presbytery blessing and Missionaries meet**
14	Mon		Bishop's House: Meeting with priests
15	Tue	06.30 pm	Mukkoottukal: Parish visit
16	Wed	05.00 pm	Pathukani: Parish visit
17	Thu	05.00 pm	Pre-Christmas gathering for the presbyterium
18	Fri	10.00 am	North-East: Guwahati >>>> Barpetta Road
19	Sat		North-East: Barpetta Road >>> Bongigoan >>> Sonapahar
20	**Sun**		**North-East: Sonapahar >>> Guwahati >>> Trivandrum**
21	Mon	02.30 pm	Manjalumoodu: Church Blessing
22	Tue		Bishop's House
23	Wedn		Bishop's House
24	Thu	10.00 pm	Cheenivilai: Christmas eve Holy Qurbana
25	Fri	07.00 am	Vellambi: Holy Qurbana
26	Sat		Bishops House
27	**Sun**	**07.30 am**	**Marapady: Confirmation Holy Qurbana**
28	Mon	10.00 am	Pilankarai: Marriage Holy Qurbana
29	Tue		Bishop's House
30	Wed	10.00 am	Padanthalumoodu: Marriage Holy Qurbana
31	Thu	03.30 pm	Ernakulam: Marriage Holy Qurbana

Rev. Fr. Robin Jose, Bishop's Secretary

2020, டிசம்பர் மாத முக்கிய நிகழ்வுகள்	
03	அருட்பணிப் பேரவை
21	மஞ்சாலுமூடு சிறுமலர் ஆலய அர்ச்சிப்பு

21.11.2020
TAMIL CLASS FOR
SISTERS, KALLUVILAI

17.11.2020
PRIESTS' CONFERENCE
SANGAMAM

22.11.2020
CHURCH FEAST
PALAPPALLAM

22.11.2020
AUDITORIUM
BLESSING, KARODE

15.11.2020
CHURCH FEAST
THETTIYODE

30.11.2020
MARIAN NIGHT
ST. MARY'S SEMINARY, MUKKOOTTUKKAI

03.11.2020
COLLEGE NEW FLOOR
BLESSING, SOOSAIPURAM

03.11.2020
S.A.B.S. JUBILEE CELEBRATION,
SOOSAIPURAM

50 Years of Religious Life

Rev. Sr. Alice Vigi, CMC

Rev. Sr. Bency Ann, S.H

Rev. Sr. Elcy Caroline, S.H.

Rev. Sr. Elizabeth SABS

Rev. Sr. Francis Mary, SDS

Rev. Sr. Mary Bosco, SDS

Rev. Sr. Rose Sebastian, SDS

Rev. Sr. Roslin Jose, S.H.

Rev. Sr. Zeliguerin CMC

25 Years of Priestly & Religious Life

Rev. Fr. Mathew Mulangasserril MST

Rev. Fr. Joseph Anithottam CMI

Rev. Fr. Babu Thattil CMI

Rev. Sr. Preetha Therese S.H.

Rev. Sr. Mary Beena LSDP

Rev. Sr. Mary Jaimy LSDP

Rev. Sr. Anns Maria CMC

For Private Circulation Only

IRAI ARUL, The Official Organ of the Diocese of Thuckalay
Published by: Fr. Joseph Santhosh for the Diocese of Thuckalay,
Bishop's House, Post Box No. 12, Thuckalay - 629175
Printed at: Pulari Offset Press, Thuckalay 629175, Ph. 04651-252570